# திட்டமிடாத பிளஸ் தொடர்புகள்

COVID-19 ஆல் பாதிக்கப்பட்ட ஒரு நபருடன் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் (விருப்பமான இடம்) நீங்கள் இருந்திருக்கிறீர்கள். நீங்கள் பின்வருபனவற்றை கடைபிடிக்க வேண்டும்.

## வீட்டிலேயே தங்கி சோதனை செய்து கொள்ளவேண்டுமா?

*சோதனைகளுக்கு கட்டணமில்லை*

### ஆம்

**வீட்டில் தங்குங்கள் மற்றும் உடனடியாகவும் ஐந்தாம் நாளும் சோதனை செய்துக்கொள்ளுங்கள்.**

**எதிர்மறை முடிவை பெறும்வரை வீட்டிலேயே தங்க வேண்டும்.**

உங்களுக்கு உடனடியாகவும் நீங்கள் கடைசியாக COVID-19 நோயாளிக்கு அருகில் இருந்த தினத்திலிருந்து கணக்கிடப்படும் ஐந்தாம் நாளும் சோதனை செய்யப்பட வேண்டும்.

**வீட்டிலேயே தங்குங்கள்** உங்களுக்கு ஒரு **எதிர்மறையான முடிவு வரும்வரை (நாள் 5 அல்லது பிறகு)** மற்றும் சாத்தியமென்றால் உங்கள் வீட்டில் மற்றவர்களிடமிருந்து விலகியிருங்கள்.

இதன் அர்த்தம் என்னவென்றால் நீங்கள் பணிக்கோ அல்லது உடற்பயிற்சிக்காகவோ வெளியில் செல்ல முடியாது. ஆன்லைனில் பொருட்கள் வாங்குங்கள் அல்லது குடும்ப உறுப்பினர்கள்/நண்பர்களிடம் உங்களுக்காக உணவு மற்றும் மருந்துகள் தருவிக்க கூறுங்கள்.

நேர்மறை சோதனை: உங்களுக்கு COVID-19 **உள்ளது** (பொது சுகாதாரத்துறை உங்களை அழைக்கும்).

COVID-19 இன் காரணமாக வீட்டிலிருக்க தேவைப்படும் நபர்களுக்கு நிதி ஆதரவு கிடைக்கிறது.

## அறிகுறிகளை கவனிக்க வேண்டுமா?

### ஆம்

**COVID-19 பாதித்த நபருக்கு அருகில் நீங்கள் கடைசியாக இருந்த நாளுக்கு பின்னர் 14 நாட்களுக்கு.**

**COVID-19 அறிகுறிகள் பின்வரும் ஒன்றோ அல்லது மேற்பட்ட அறிகுறிகளை உள்ளடக்கலாம்:** *புதிய அல்லது மோசமடையும் இருமல், காய்ச்சல், மூச்சிறைப்பு, தொண்டை எரிச்சல், மூக்கொழுகுதல், தற்காலிக வாசனை/சுவை உணர்வு இழப்பு.*

சில நபர்களுக்கு பின்வரும் அறிகுறிகளும் ஏற்படலாம்: *வயிற்றுப்போக்கு, தலைவலி, தசை வலி, குமட்டல், குழப்பம், எரிச்சல்.*

உங்களுக்கு அறிகுறிகள் ஏற்பட்டால் — உங்கள் சோதனை முடிவுகள் ஏற்கனவே எதிர்மறையாக இருந்தாலும் — மீண்டும் ஒரு சோதனை செய்யுங்கள் மற்றும் வீட்டிலேயே தங்குங்கள், சாத்தியமென்றால் வீட்டிலிருக்கும் மற்றவர்களிடமிருந்து, பின்வரும் காலம்வரை விலகியிருங்கள்:

- உங்களுக்கு எதிர்மறை முடிவு கிடைக்கும் வரை, **மற்றும்**
- அறிகுறிகள் நின்ற பிறகு 24 மணிநேரம் வரை

சோதனை மைய தகவலுக்கு ஹெல்த்லைன் எண் **(0800 358 5453)** ஐ அழைக்கவும் அல்லது healthpoint.co.nz/covid-19/ க்கு வருகை தரவும்.

## உங்களுடன் வசிக்கும் நபர்கள் ஏதேனும் செய்ய வேண்டுமா?

### இல்லை

**அவர்களுக்கு அறிகுறிகள் ஏற்பட்டாலொழிய.**

எவருக்கேனும் அறிகுறிகள் ஏற்பட்டால் அவர்கள் ஹெல்த்லைனை அழைத்து ஒரு சோதனை செய்துகொள்ள வேண்டும் மற்றும், பின்வரும் காலம்வரை வீட்டில் தங்கவேண்டும்:

- அவர்களுக்கு எதிர்மறை முடிவு கிடைக்கும் வரை, **மற்றும்**
- அவர்கள் அறிகுறிகள் மறைந்த பிறகு 24 மணிநேரம் வரை

அறிகுறிகள் கொண்ட நபர் உடன் வசிப்பவர்களிடமிருந்து கூடுமானவரை விலகியிருக்க வேண்டும்.

**உங்களுக்கு ஒரு எதிர்மறையான முடிவு வரும்வரை வீட்டிலேயே தங்குங்கள். உங்களுக்கு அறிகுறிகள் ஏற்பட்டால் வீட்டிலேயே தங்குங்கள். நீங்கள் பூரண குணமடையும் வரை வீட்டிலேயே தங்குங்கள்.**

உங்களுக்கு அறிகுறிகள் ஏற்பட்டால் அல்லது ஆலோசனை தேவைப்பட்டால் ஹெல்த்லைனை அழைக்கவும்: தொலைபேசி எண் **0800 358 5453** -க்கு டயல் செய்யவும். உங்களுக்கு சுவாச பிரச்சினை ஏற்பட்டால், ஒரு ஆம்புலன்சுக்கு அழையுங்கள்: தொலைபேசி எண் **111** –க்கு டயல் செய்யவும்.